# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 07.01.2011 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் அதிகாரம் அல்பக்கராவின் 266வது வசனத்தை ஓதினார்கள்:**

**பொருள்: தங்களுடைய செல்வத்தை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறவும், தங்களைத் தாங்களே உறதிப்படுத்திக் கொள்ளவும் செலவு செய்பவரின் உதாரணம் உயரமான இடத்திலுள்ள ஒரு தோட்டத்திற்கு ஒப்பானது. அதன் மீது பெருமழை பொழிகின்ற போது, அது தனது கனியை இருமடங்காகத் தருகின்றது. மேலும் அதன் மீது பெருமழை பெய்யவில்லையாயினும், மிகவும் குறைவான மழையே (அதற்குப் போதுமானது). நீங்கள் செய்து கொண்டிருப்பதை அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கின்றான். (2:266)**

ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்கு திருக்குர்ஆன் வடிவில் இறங்கிய இறுதி வேதத்தின் மீது ஒவ்வொரு அஹ்மதியும் நம்பிக்கை கொள்கின்றார். மேலும் அதன் ஒவ்வொரு கட்டளையும் செயல்படத் தகுந்தது என்ற நம்பிக்கையில் இன்று உலகில் வசிக்கக்கூடிய அஹ்மதிய்யத்தைப் புரிந்த ஒவ்வொரு அஹ்மதியும் நிலைநிற்கின்றார். அதன் ஒவ்வொரு கட்டளையின்படியும் செயல்படுவது ஒவ்வொரு நம்பிக்கையாளரையும் உண்மையான நம்பிக்கையாளராக ஆக்குகின்றது. மேலும் இறைவழியில் பொருள் தியாகம் என்பதும் இறைவனின் கட்டளைகளில் ஒரு கட்டளையாகும். இது தொடர்பாக திருக்குர்ஆனின் சூரா அல்பக்கராவின் ஆரம்ப வசனங்களிலேயே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

திருக்குர்ஆன் நேர்வழி வழங்கக் கூடியதாகும். எவர்கள் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வார்களோ, மேலும் தொழுகையை நிலைநாட்டுவார்களோ, தமக்கு வழங்கப்பட்டதிலிருந்து செலவு செய்வார்களோ அவர்களே நம்பிக்கையாளர்கள் ஆவர். ஆக, இறையச்சமுடையவராக ஆவதற்கும் திருக்குர்ஆனிலிருந்து நேர்வழி பெறுவதற்கும் இந்த மூன்று விஷயங்களும் அவசியமாகும். இதில் நான் கூறியது போன்று அல்லாஹ்வின் வழியில் செலவிடுவதும் ஒன்றாகும். அடுத்து சூரா பக்கராவின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை பல்வேறு இடங்களில் பல்வேறு கோணங்களில் பொருள் தியாகம் பற்றி கூறப்பட்டுள்ளது. இதேபோன்று திருக்குர்ஆனில் இன்னும் பல்வேறு இடங்களிலும் பொருள் தியாகம் பற்றி குறிப்பு வருகின்றது. ஆக! ஒரு அஹ்மதி முஸ்லிம் பொருள் தியாகத்தின் முக்கியத்துவத்தை புரிந்தவராக திகழ்கின்றார். மேலும் இந்த போதனையின்படி செயல்பட்டவாறு தியாகங்கள் செய்த பிறகு ஒருவர் நேரடியாக இறைவனின் அசாதாரண அருட்களைக் காணும்போது அந்த பொருள் தியாகம் மற்றும் இறை இருப்பின் மீதும் இஸ்லாத்தின் உண்மையின் மீதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவத்தின் மீதும் அவருக்கு நம்பிக்கை இன்னும் உறுதியாகி விடுகிறது. நான் ஓதிய வசனத்தில் கூட அல்லாஹ்வின் வழியில் செலவிடுதல் தொடர்பாகத்தான் கூறப்படுகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான்: அல்லாஹ்வின் வழியில் செலவிடக் கூடியவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் தங்களது செல்வத்தினை விரும்புவதில்லை. பிறருக்கு உபகாரம் செய்கின்றோம் என்ற எண்ணத்திலும் செலவிடுவதில்லை. மாறாக, முழுமையான அல்லாஹ்வின் திருப்திக்காக செலவிடுகின்றனர். தங்களுடனுள்ள ஏழைகளை உறுதிப்படுத்துவதற்காக செலவிடுகின்றனர். மேலும் தமது ஈமானை உறுதிப்படுத்துவதற்காக செலவிடுகின்றனர். அல்லாஹ்வின் திருப்தியை விரும்புவது மேலும் தமது மக்களை உறுதிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் போன்றவை நல்லியல்பு கொண்ட ஒவ்வொருவருக்கும் இருக்கும். நல்லியல்பு கொண்டவருக்குத்தான் அந்த எண்ணம் இருக்கவும் செய்யும். தீய இயல்பு கொண்டவரிடத்தில் இந்த விருப்பம் இருக்க முடியாது. சுயநலத்திலிருந்து விலகி எவர்கள் சிந்திக்கின்றார்களோ அவர்களுக்குத்தான் இந்த எண்ணம் இருக்க முடியும். எனவே எவர்கள் சுயநலத்திலிருந்து விலகி

சிந்திக்கின்றார்களோ, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு விருப்பமுடையவராக இருக்கின்றார்களோ அவர்கள் ஒருபோதும் பகட்டிற்காக செலவு செய்யமாட்டார்கள். மேலும் அவர்கள் செலவு செய்வது என்பது உபகாரமாகவோ அல்லது உபகாரம் செய்து விட்டோம் என்று சுட்டிக் காட்டும் விதத்திலோ அமையாது. இதுபோன்ற பொருள் தியாகத்தில் செல்வந்தவர்கள் மட்டும் பங்குபெறுவதில்லை. அதில் ஏழைகளும் பங்கு பெறுகின்றனர். ஏழையும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்ற ஆசை கொண்டவராக இருக்கின்றார். பொதுவாக பணக்காரர்களை விட ஏழைகள்தான் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்ற ஆசை கொண்டவர்களாக இருக்கின்றார்கள். நபிமார்களின் ஜமாஅத்துகள் உருவாகும் போது அதில் பெரும்பான்மையினர் ஏழைகளாகத்தான் இருக்கின்றனர். இந்த ஏழ்மையிலும் தமது சகோதரர்களுக்கு எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு உதவி செய்கின்றனர். மேலும் ஜமாஅத்திற்கும் அவர்கள் இயன்றவரை தொண்டாற்றுகின்றனர். மேலும் உறுதிப்படுத்தவும் முயற்சி செய்கின்றனர். தனி நபர் அளவிலும் ஒருவர் மற்றவரை உறுதிப்படுத்துகின்ற உயர் தரமான முன்னுதாரணம் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்யப்பட்ட போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சஹாபாக்களிடத்தில் நமக்கு கிடைக்கின்றது. அன்ஸார்கள் முஹாஜிரீன்களை அவர்களின் கால்களில் நிலைநிறுத்த நிகரற்ற தியாகங்கள் செய்தனர். அடுத்து, ஜமாஅத் அளவிலும் சஹாபாக்களின் தியாகங்களே தென்படுகின்றன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு நோக்கத்திற்காக சந்தாக்கள் கொடுக்கும்படி கூறியபோதெல்லாம் தங்களிடத்தில் இருந்ததையெல்லாம் அவர்கள் அல்லாஹ்வின் வழியில் கொடுத்து விடுவார்கள். அல்லாஹ் இந்த வசனத்தில் செல்வந்தர், ஏழை இருவருக்கும் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதற்கு கவனமூட்டியுள்ளான். நீங்கள் அல்லாஹ்வின் வழியில் செலவிட்டால், தத்தமது ஆற்றலுக்கேற்ப நீங்கள் என்ன செலவிடுவீர்களோ அதற்கு இரண்டு மடங்கு கூலி உங்களுக்கு கிடைக்கும் என அல்லாஹ் கூறுகின்றான். தூய எண்ணத்துடன் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் அல்லாஹ்வின் வழியில் என்ன செலவிட்டாலும் இறைவன் நிச்சயமாக அதற்கு கூலி வழங்குவான் என அல்லாஹ் ஏழைகளுக்கு ஆறுதல் வழங்கியுள்ளான். இது தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் மற்றோரிடத்தில் 700 மடங்கு அல்லது அதை விட அதிகமாக கூலி வழங்குவதாக கூறுகின்றான்.

இங்கு பெரிய தொகை, பெரிய பொருள் தியாகம் தான் ஒப்புக் கொள்ளப்படும் என்று எந்தவொரு நிபந்தனையும் வைக்கப்படவில்லை. மாறாக, அல்லாஹ் ஒப்புக் கொள்வது என்பது உண்மையின் தியாகங்களின் உணர்வைத்தான். இன்னும் கூறப்போனால் ஒவ்வொரு அமலின் நிய்யத்தைத்தான் இறைவன் ஒப்புக் கொள்கிறான். சில நேரத்தில் பெரிய பொருள் தியாகங்களை விட சிறிய பொருள் தியாகம் அதிக அந்தஸ்தைப் பெறுகின்றது.

**ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

ஒரு திர்ஹம் ஒரு இலட்சம் திர்ஹம் –ஐ விட மகத்துவமாகி விட்டது. அது எப்படி? என்று சஹாபாக்கள் கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நபரிடத்தில் இரண்டு திர்ஹம் இருந்தது. அதில் ஒன்றை அவர் தியாகம் செய்து விட்டார். மற்றொரு நபரிடத்தில் அளவற்ற செல்வங்களும், சொத்துக்களும் இருந்தன. அவர் அதிலிருந்து ஒரு இலட்சம் திர்ஹம் மதிப்பிலான பொருள் தியாகம் செய்தார். அது பெரிய தொகையாக இருந்தாலும் முதல் நபர் செய்த தியாகத்தோடு ஒப்பிடுகையில் அது மிகக் குறைவானதே ஆகும்.

ஆக, அல்லாஹ்வின் பார்வையில் பொருள் தியாகத்தின் தரம் என்பது உணர்வினைச் சார்ந்ததாகும். அளவினை சார்ந்ததில்லை. அல்லாஹ் இந்த வசனத்திலும் ஏழைகளுக்கு ஆறுதல் வழங்கியுள்ளான். எவ்வாறு சிறு சிறு தூரல்கள் தோட்டத்தினை பழங்களினால் நிறைத்து விடுகின்றதோ அதேபோன்று தமது தகுதிக்கேற்ப நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட சிறிய தியாகம் கூட நல்ல அமல் செய்யக் கூடியவருக்கு அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொடுத்து பெரிய பொருள் தியாகம் செய்தவருக்கு சமமானவராக அவரை ஆக்கி விடுகின்றது. மாறாக, நான் எடுத்து வைத்த உதாரணத்திலிருந்து நிரூபணமாவது போன்று சில நேரத்தில் அந்தஸ்திலும் உயர்த்தி விடுகின்றது.

**அடுத்து அல்லாஹ் அதே வசனத்தில் கூறுகின்றான்:**

வல்லாஹு பிமா தஃமலூன பஷீர். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் பார்க்கின்றான். இதனைக் கூறி அல்லாஹ் உள்ளங்களின் நிலைகளை அறிந்தவனாக இருக்கின்றான் என்பதை தெளிவுபடுத்தி விட்டான். அவன் உங்களது நோக்கத்தை அறிகிறான். எந்த ரூஹுடன் நீங்கள் தியாகங்கள் செய்கின்றீர்களோ அதனை அவன் அறிகின்றான். எனவே அமல்களின் எண்ணங்களுக்கேற்ப தான் அல்லாஹ்விடத்தில் அதற்கு கூலி கிடைக்கின்றது. அல்லாஹ் உங்களின் பொருளாதார தகுதிகளை அறிந்தவனாக உள்ளான். நீங்கள் உங்களின் தகுதிக்கேற்ப பொருள் தியாகம் செய்திருந்தால் அதற்கேற்ப கூலி கிடைக்கும். எனவே தியாகங்கள் ஒப்புக் கொள்ளப்படுவது கூட அமல்களின் நோக்கம் மற்றும் உணர்வுகளின் அடிப்படையிலேயே அமைகின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்தில் அன்னார் பொருள் தியாகத்திற்கான அறிவிப்பு செய்த போது, ஏழையும், பணக்காரரும் தத்தமது தகுதிக்கேற்ப பொருள் தியாகம் செய்தனர். அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களில் பெரும்பான்மையான மக்கள் ஏழைகளாகவே இருந்தனர். மேலும் அவர்களின் தியாகங்களும் கூட தொகை என்ற ரீதியில் பார்ப்பதாயிருந்தால் மிகக் குறைவானதாகவே இருந்தது. ஆனால் இந்த தியாகங்கள் எந்த அளவுக்கு பயன் அளித்தது என்றால் இன்று வரை அந்த சான்றோர்களின் சந்ததிகள் அந்த கனிகளை உண்டு வருகின்றனர். இன்று அந்த சான்றோர்களின் சந்ததிகளில் பொருளாதார ரீதியில் மிகவும் சிறந்து விளங்குகின்றார்கள். எனவே இப்போது அவர்கள் பொருள் தியாகங்களின் கனமழையின் உதாரணத்தை, அதன் நிலையை உருவாக்க வேண்டும். தமது பொருள் தியாகங்களில் இந்த நிலையை உருவாக்க வேண்டும். ஏனென்றால் அப்போதுதான் அவர்களுடைய மற்றும் அவர்களின் சந்ததிகளின் அமல்கள் என்ற மரம் எப்பொழுதும் பசுமையாக விளங்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சாதாரண தியாகம் அதாவது ஒரு ரூபாய் பொருள் தியாகம் செய்தவர்களைக் கூட தமது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் ஒவ்வொரு மாதமும் ஒரு ரூபாய் சந்தா கொடுப்பேன் என்று தம்மீது கட்டாயமாக்கி கொண்டவரின் பொருள் தியாகத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். அன்னாருடைய சஹாபாக்கள் பொருள் தியாகத்தில் எவ்வாறெல்லாம் சிறந்து விளங்கினார்கள். அதற்கும் சில உதாரணங்களை கூறுகின்றேன். சவுத்ரி அப்துல் அஸீஸ் சாஹிப் கணக்கராக இருந்தார்கள். அவர்களைப் பற்றி பெஷவரைச் சார்ந்த காஸி முஹம்மத் யூசுஃப் சாஹிப் கூறுகின்றார்கள்.

ஒருமுறை குர்தாஸ்பூரில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பொருள் தியாகம் செய்யுமாறு அறிவிப்பு செய்தார்கள். சவுத்ரி அப்துல் அஸீஸ் சாஹிப் தானாகவே முன்வந்து 100 ரூபாய் மதிப்பிலான வெள்ளியை ஹுஸுர் (அலை) அவர்களிடத்தில் கொடுத்து விட்டு சென்றார்கள். மேலும் என்னிடத்தில் இதுதான் இருந்தது. அதனை எடுத்து வைத்துள்ளேன் எனக் கூறினார்கள்.

காஸி சாஹிப் கூறுகின்றார்கள்: எனக்கு கணக்கர் அவர்களின் இந்த குர்பானி ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. மாத வருமானம் ஆறு ரூபாய் கிடைத்து வந்த அவர் எவ்வாறு தூய உள்ளத்துடன் தியாகம் செய்துள்ளார் என்று எண்ணி எனக்கு ஏக்கம் ஏற்பட்டுள்ளது.

காஸி சாஹிப் எழுதுகின்றார்கள்: இறைவன் அவரது அந்த தூய்மையின் காரணமாக அவர் மீது பெரும் அருள் செய்தான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்களிடத்தில் இறையச்சம் மிக அதிகமாக இருந்தது என்பதை நான் இங்கு தெளிவுபடுத்திக் கொள்கிறேன். அவர்கள் தக்வாவில் மிகவும் முன்னேறி இருந்தார்கள். அன்னாரிடத்தில் எழுந்து நேரடியாக சஹாபாக்கள் பயன்பெற்றதன் விளைவாக அவர்களின் தக்வாவின் தரம் மிகவும் உயர்ந்திருந்தது.

சவுத்ரி சாஹிப் அவர்களும் தக்வாவில் மிகவும் முன்னேறியிருந்தார்கள். அன்னார் மற்ற கணக்கர்களை போன்றிருக்கவில்லை. நம்முடைய நாட்டில் கணக்கர்கள் தொடர்பாக இந்த கூற்று மிகவும் பிரபலமானதாகும். கணக்கர்களின் சம்பளம் மிகவும் குறைவானதுதான். ஆனால் அவர்களின் இதர வருமானம் மிக அதிகமானதாகும். பல்வேறு வழிகளிலும், பல்வேறு நபர்களிடமும் அவர்கள் வசூல் செய்வார்கள். சிலர் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் ஓய்வு பெறும் போது

அவர்களுக்கு பல நூற்றுக்கணக்கான ஏக்கர் அளவிலான நிலம் மற்றும் சொத்துக்களுக்கு உரிமையுடையவராக இருக்கின்றனர்.

எனக்கு நினைவில் உள்ளது. என்னுடன் ஒரு கணக்கரின் மகன் படித்து வந்தான். அவனுடைய உடை, செலவுகள், பழக்கவழக்கங்கள் போன்றவை ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கக் கூடியவர்களிடம்கூட அவ்வாறு இருக்காது. என்னுடைய தந்தையின் மாத வருமானம் 45 ரூபாய் தான். ஆனால் அல்லாஹ்வின் அருள் அதிகம் என்று அவனே கூறுவான். ஆக இவர்களைப் பொருத்தவரை தகாத வழியில் வருகின்ற வருமானம் அல்லாஹ்வின் அருளாகி விடுகின்றது. மேலும் ஆகுமான வழியில் வரும் வருமானம் அரசாங்கத்தின் சம்பளமாக ஆகி விட்டது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்தான் அல்லாஹ்வின் அருள் என்றால் என்ன? என்பதனை நமக்கு புரிய வைத்துள்ளார்கள். ஆனால் இவர்களோ எங்களுக்கு எந்த மஸீஹின் அவசியமுமில்லை. மஹ்தியின் அவசியமுமில்லை. சீர்திருத்தவாதிக்கும் அவசியமில்லை என கூறுகின்றனர். எனவே இந்த அவசியத்தை அவர்கள் புரிந்து கொண்டால், அவரை ஏற்றுக் கொண்டால் அல்லாஹ்வின் அருள் எவ்வாறு கிடைக்கும்? அது என்ன என்பதை அவர்களால் எவ்வாறு சரியான முறையில் கண்டு கொள்ள முடியும்? இறைவனுக்காக எல்லா வகையான தியாகங்களும் செய்வதன் மூலமாக அல்லாஹ்வின் அருள் எவ்வாறு கிடைக்கும் என்று ஒரு அஹ்மதிக்குத்தான் தெரியும். கன மழையாக இருக்கட்டும்; அல்லது சாரலாக இருக்கட்டும். பெரிய தியாகமாக இருக்கட்டும்; அல்லது ஏழையாக இருக்கட்டும். அல்லாஹ்வுக்காக செய்யப்பட்ட தியாகங்கள் இரண்டு மடங்கு கனிகளைப் பெற்றுத் தருகின்றன. ஹஸ்ரத் சவுத்ரி அப்துல் அஸீஹ் சாஹிப் அவர்களின் தியாகங்களுக்குப் பதிலாக அல்லாஹ் அவருக்கு அளவற்ற கனிகளை வழங்கினான் என்று காஸி முஹம்மது யூசுஃப் சாஹிப் எழுதியிருப்பது போன்று தியாகங்கள் கனிகளைப் பெற்றுத் தருகின்றன. அன்னாருக்கு (சவுத்ரி சாஹிப்) நிலமும் கூட இருந்திருக்கலாம். ஏனென்றால் கணக்கர் பொதுவாக கிராமத்தை சார்ந்தவராகத்தான் இருப்பர். அதிலிருந்தும் கொஞ்சம் வருவாய் இருந்திருக்கும். அதன் காரணமாக அன்னார் கொஞ்சம் தொகையை ஒன்றுசேர்த்திருக்கலாம். அன்னார் அவை அனைத்தையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பாதங்களில் வைத்து விட்டார்கள். எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ்விற்கு பைசாவிற்கான எந்த தேவையுமில்லை. அல்லாஹ்வுக்கு அடியார்களிடத்திலிருந்து பைசா பெற வேண்டியது அவசியமில்லை. அடியாருக்கு நற்கூலி வழங்குவதற்குத்தான் அல்லாஹ் அடியாரை பொருள் தியாகம் செய்யும் படி கூறுகின்றான். அல்லாஹ்வின் தூதர்களின் நிலையும் இவ்வாறு தான் இருக்கும். ஜமாஅத்தின் செலவுகள் தேவைகள் எவ்வாறு முழுமை பெறும் என்ற கவலை அவர்களுக்கு இருப்பதில்லை. அல்லாஹ் ஒருவரை அனுப்பி அவரிடமிருந்து ஒரு பணியை வாங்கும்போது அதற்கான காரணிகளையும் கிடைக்கப்பெற செய்து விடுகின்றான். நிச்சயமாக நபிமார்கள் வெளிப்படையான அறிவிப்பை செய்கின்றனர். கலீஃபாக்களும் செய்கின்றனர். ஆனால் தேவையை பூர்த்தி செய்வதாக அல்லாஹ் வாக்குறுதி வழங்கியுள்ளான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடனும் இந்த வாக்குறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே அன்னார் ஓரிடத்தில் இதனை வெளிப்படுத்தியும் உள்ளார்கள்.

அல்லாஹ் எனக்கு வாக்குறுதி வழங்கியுள்ளான். பணம் எங்கிருந்து வரும் என்று கவலையில்லை. ஆனால் அதனைக் கண்டு நீங்கள் உலகவாதிகளாக ஆகிவிடக் கூடாது.

அதாவது உங்களுக்கு செல்வச் செழிப்பு ஏற்படும் என்று தனி நபருக்கும் நற்செய்தி வழங்கி விட்டார்கள். ஜமாஅத் அளவிலும் செழிப்பு ஏற்படும் என்று நற்செய்தி வழங்கி விட்டார்கள். எனவே ஜமாஅத் அளவில் (செல்வச் செழிப்பு ஏற்படும் போது எவர்கள் கையில் செலவு செய்யும் பொறுப்பு உள்ளதோ அவர்கள் எப்போதும் நாம் எவ்வகையிலும் தேவையில்லாத செலவுகள் செய்தல் கூடாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பைசாவையும் சிந்தித்து கவனமாகச் செலவிட வேண்டும். ஏழைகள் தியாகங்கள் செய்கின்றனர். பணக்காரர்களும் தியாகங்கள் செய்கின்றனர். இதனை கருத்தில் கொண்டு செலவு செய்வது செலவு செய்பவர்களின் பணியாகும். இது மிகவும் முக்கியமான பணியாகும். ஏனென்றால் எங்கு அவர்கள்

மார்க்கத்திற்கு தொண்டு செய்கின்றார்களோ அங்கு இந்த செலவுகளை கவனமாக செய்யும் போதுதான் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக்கூடியவர்களாகவும் அவர்களால் ஆக முடியும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பொருள் தியாகம் செய்வதற்கான உணர்வை ஜமாஅத்திற்கு ஊட்டியிருக்கின்றார்கள். அல்லாஹ்வின் அருளால் இதில் ஜமாஅத் முன்னேறிக் கொண்டே வருகிறது. சஹாபாக்களின் தியாகங்களின் முன்மாதிரிகளைப் புதிதாக (பைஅத் செய்தவர்கள்) வந்தவர்களும் கூட உயிருடன் வைத்திருக்கின்றார்கள். உலகில் மிக நீண்ட நெடிய பகுதிகளில் எங்கெல்லாம் ஜமாஅத் பரவி வருகின்றதோ அங்கு ஏழை மக்களாக இருக்கின்றார்கள். ஆனால் சிறிய தூரல் (சிறிய தியாகம்) கூட அவர்களை கனிகளால் நிரப்புகின்றது. கனமழையின் உதாரணங்களும் நமக்கு தென்படுகின்றன. கனமழையைப் போன்றும் பொருள் தியாகங்களில் மக்கள் முன்னேறுகின்றனர். இதன் விளைவாக அல்லாஹ்வின் அருள் மழை அவர்களின் வியாபாரங்களை பல மடங்கு அதிகரிக்கச் செய்து விடுகின்றது. இப்போது நான் சில சம்பவங்களை தேர்ந்தெடுத்துள்ளேன். அதனை உங்கள் முன்னால் எடுத்து வைக்கின்றேன்.

**இந்தியாவிலிருந்து நாஸிம் வக்ஃபே ஜதீத் கூறுகின்றார்கள்:**

கடந்த ஆண்டு 2010 -ல் நான் குஜராத் சுற்றுப் பயணத்திற்கு சென்றிருந்தேன். அங்கு காந்திதாம் என்ற பகுதியைச் சார்ந்த ஒரு நண்பரிடத்தில் வக்ஃபே ஜதீத் சந்தா வாங்குவதற்காக சென்றேன். அப்போது அவருடைய வக்ஃபே ஜதீத் சந்தா 13,000/- ரூபாயாக இருந்தது. நான் அவர்களின் பொருளாதார நிலைகளை அறிந்திருந்தேன். எனவே நான் அவரிடத்தில் அல்லாஹ் உங்களுக்கு அதிகமாக வழங்கியுள்ளான். எனவே இப்போது நீங்கள் உங்கள் வாக்குறுதிகளை 50,000/- ரூபாயாக ஆக்கி விடுங்கள் எனக் கூறினேன். அவர் அந்த தருணத்திலேயே 55,000/- செக் எழுதிக் கொடுத்து விட்டு கூறினார். என்னுடைய வியாபாரத்தில் 21 இலட்சம் ரூபாய் சிக்கியுள்ளது. அது கிடைப்பதற்கான வாய்ப்பில்லை எனத் தோன்றுகிறது. எனவே அதற்காக துஆ செய்யுங்கள் என்று கூறினார். ஆனால் இரண்டு, நான்கு நாட்களுக்குள்ளேயே கிடைக்காமல் இருந்த அந்த தொகை திரும்ப கிடைத்து விட்டது. சம்பந்தப்பட்டவர்கள் தானாக முன் வந்து 21 இலட்சத்தை கொடுத்து விட்டார்கள்.

**இதேபோன்று நம்முடைய வக்ஃபே ஜதீத் இன்ஸ்பெக்டர் கூறுகின்றார்கள்:**

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் ஜமாஅத்தில் 10 ஆண்டிற்கு முன்பு பைஅத் செய்த நல்ல நண்பர் ஒருவருக்கு வக்ஃபே ஜதீத் முக்கியத்துவம் பற்றி நான் கூறினேன். உங்களுடைய வருமானம் அதிகமாகும். எனவே நீங்கள் 30,000/- ரூபாய் வாக்குறுதி செலுத்துங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் மவ்லவி சாஹிப் நான் உங்கள் விஷயங்களை கேட்டு விட்டேன். என்னுடைய வாக்குறுதியாக 30,000/- அல்ல; 50,000/- ரூபாயாக எழுதிக் கொள்ளுங்கள் என என்னிடம் கூறினார். அதற்கு நான் அவரிடம் இது உங்களது தகுதிக்கு அப்பாற்பட்டதாகும் எனக் கூறினேன். அதற்கு அவர் நான் அல்லாஹ்விற்காக கொடுக்கிறேன். உங்களுக்கென்ன வந்து விட்டது? என்னுடைய சக்தி என்ன? அல்லாஹ் எவ்வாறு அருள் செய்கின்றான் என்றும் எனக்குத் தெரியும் என்று கூறி ரமலான் மாதத்தில் தனது வாக்குறுதியை முழுமை செய்து விட்டார். அடுத்து இந்த வருடத்திற்கான வாக்குறுதியில் தனது வருமானம் அதிகரித்து விட்டதாக கூறி வக்ஃபே ஜதீத் மற்றும் தஹ்ரீகே ஜதீத் இரண்டிற்கும் தலா ஒரு இலட்ச ரூபாய் வாக்குறுதி கொடுத்து விட்டார்.

**அடுத்து பெங்காள் மாநிலத்தின் வக்ஃபே ஜதீத் இன்ஸ்பெக்டர் ஷேக் முஹம்மத் அஹ்மத் தாவூத் கூறுகின்றார்கள்:**

ஒரு மத்ரஸாவில் கற்பித்து வந்த ஒருவர் அஹ்மதி ஆனார். அதன் பிறகு அவர் முஅல்லிமிற்கான பயிற்சி பெற்றார். அவர் 500 ரூபாய் சந்தா கொடுத்து வந்தார். பிறகு அல்லாஹ் அருள் செய்தான். இப்போது அவர் 5000 ரூபாய் சந்தா கொடுத்து வருகிறார். அவர் கூறுகின்றார்: நான் அஹ்மதி ஆவதற்கு முன்பு மக்களின் வீடுகளுக்கு சென்று உணவு உண்டு வந்தேன். இப்போது நான் பைஅத் பிறகு சந்தாவின் பரக்கத்தின் விளைவாக மக்கள் என்னுடைய வீட்டில் உணவு உண்கின்றனர். முன்பு சொத்துக்கள் ஏதும் கிடையாது. இப்போது சொத்தும் கிடைத்துள்ளது.

அடுத்து, **தமிழ்நாடு கோயம்புத்தூர் ஜமாஅத்தின் பெரும்பான்மை புதிய அஹ்மதிகள் தான்.** அவர்களில் பெரும்பாலோர் 10, 15 ஆண்டுகளுக்கு முன்னர் தான் பைஅத் செய்தார்கள். அதில் **அல்லாஹ்வின் அருளினால் சம்பாதிக்கக் கூடியவர்களில் 50% பேர் வஸிய்யத் செய்து விட்டனர்.**

சில ஆண்டுகளுக்கு முன் ஒருவர் பைஅத் செய்தார். சந்தாக்களை அதிகரிக்க அல்லாஹ் அவருக்கு பாக்கியம் வழங்கினான். அவர் கூறுகின்றார்: இதன் காரணமாக அல்லாஹ் எனது வியாபாரத்தை பெருக்கி விட்டான். எனது அஹ்மதி அல்லாத உறவினர்கள் இவருக்கு எங்கிருந்து இவ்வளவு பணம் வருகின்றது என்று ஆச்சரியப்படுகின்றனர். நான் அவர்களிடத்தில் இவையனைத்தும் அல்லாஹ்வின் அருள் மற்றும் அஹ்மதிய்யத்தின் பரக்கத்தாகும் எனக் கூறி வருகிறேன் என அவர் கூறுகின்றார். இது இந்தியாவின் நிலையாகும்.

ஆப்பிரிக்காவின் தொலைதூரப் பகுதிகளின் மக்களிடத்தில் தியாக உணர்வு எவ்வாறுள்ளது என்று பாருங்கள் !

**கேம்பியா அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

எங்களுடைய ஒரு ஏழை சகோதரரிடம் வக்ஃபே ஜதீத் சந்தா கொடுக்கும்படி கூறப்பட்டது. அதற்கு அவர் ஏழ்மையின் காரணமாக பசி மயக்கத்தில் இருந்து வருவதாக கூறினார். 3 நாள் கழித்து அந்த நண்பர் திரும்பி வந்தார். 50 டிராஸி என்னிடம் கொடுத்து சந்தா கொடுப்பவர்களின் பட்டியலில் பரக்கத்திற்காக நான் முதலில் இடம்பெற விரும்புகிறேன். என்று அவர் கூறினார்.

பட்னியாக இருந்தபோதிலும் சந்தா கொடுக்க வேண்டும் என்ற விருப்பம் நான் இழப்பிற்குரியவனாக ஆகிவிடக் கூடாது என்ற இந்த விருப்பம் வியக்கத்தக்கதாகும். அடுத்து இதே போன்று இன்னொரு நபரும் நான் ஏழையாவேன். என்னிடத்தில் ஒன்றுமில்லை என்று கூறினார். ஆனால் பின்னர் 100 டிராஸி கொடுத்தார்.

**அடுத்து பெனின் ஜமாஅத்தின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்:**

ஒரு புதிய ஜமாஅத்தின் பொதுச் செயலாளர் லத்தீஃபுல் அமீதி சாஹிப் வேலையின்மை காரணமாக கொஞ்ச நாளாக மிகவும் கவலையடைந்திருந்தார்கள். அவர்கள் வியாபாரத்தைத் தேடி நைஜீரியாவிற்குச் சென்றார்கள். ஆனாலும் ஒன்றும் கிடைக்கவில்லை. கவலையடைந்து நாடு திரும்பினார்கள். அப்போது வக்ஃபே ஜதீத் நிதியாண்டு முடிவடைய 2, 3 மூன்று மாதங்கள்தான் மீதமிருந்தது. அவர் வக்ஃபே ஜதீத் சந்தாவில் பாக்கி உடையவராக இருந்தார். அவரிடம் வக்ஃபே ஜதீத் சந்தா கொடுக்கும்படி கூறப்பட்டது. மேலும் இக்கட்டான சூழ்நிலைகளில் இறைவழியில் செலவிடுபவர்களுக்கு சிறப்பான வெகுமதி கிடைக்கும் எனக் கூறப்பட்டது. உடனே அடுத்த நாளே சந்தா தொகையை கொண்டு வந்து, முழு குடும்பமும் கடன் பெற்று உணவு உண்டு வரும்போது அல்லாஹ்வின் வழியில் செலவிடுவதற்கும் ஏன் கடன் வாங்கக் கூடாது? அதன் காரணமாக அல்லாஹ் எங்களின் நிலையை மாற்றி விடுவதற்கும் வாய்ப்புள்ளது எனக் கூறினார். ஆக, அல்லாஹ்வின் அருள் அவர் மீது இவ்வாறாக இறங்கியது.

சந்தா கொடுத்த 3 மாதத்தில் ஓரிடத்தில் அவருக்கு வேலை கிடைத்தது. அவருக்கு எந்த அளவுக்கு நல்ல சம்பளம் கிடைத்தது என்றால் இரண்டே மாதத்தில் தனது கடனையும் அடைத்து விட்டு தனக்கு ஒரு மோட்டார் சைக்கிளும் வாங்கிக் கொண்டார். இது என்னுடைய சந்தாவின் பரக்கத் என்று கூறினார். பெனினிலிருந்து நான் குறிப்பிட்ட அதே ஜமாஅத்தில் ஒரு முஅல்லிம் சாஹிப் சந்தா வாங்கச் சென்றார்கள். அந்த ஜமாஅத்தின் தலைவருக்கு அந்த பகுதியின் பெரும்பான்மையான மக்கள் பணம் கொடுக்க வேண்டும். அது மிகப்பெரிய தொகையாக இருந்தது. ஆனால் கடன் வாங்கியவர்கள் நீண்ட காலமாக பணத்தை திருப்பிக் கொடுக்காமல் இருந்து வந்தனர். இதன் காரணமாக சதர் சாஹிபும் அவரது குடும்ப உறுப்பினர்கள் வக்ஃபே ஜதீத் சந்தா முழுமையாக கொடுக்காமல் இருந்து வந்தார்கள். முஅல்லிம் சாஹிப் அவர்கள் சதர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு புரிய வைத்தவாறு கூறினார்கள்: பாருங்கள்! வாக்குறுதி என்பது ஒரு வகையில்

கடனாகும். நீங்கள் இறைவனுடைய கடனை வழங்குவதில் காலம் தாழ்த்தும் போது உங்களுடைய கடனை திருப்பிச் செலுத்துவதில் ஏன் மற்ற மக்கள் காலம் தாழ்த்தமாட்டார்கள்? இவ்வாறாக அவர்களுக்கு இந்த விஷயம் புரிய வந்தது. அவர்கள் தமது வக்ஃபே ஜதீத் கணக்கு வழக்குகளை சரிசெய்து விட்டு, முஅல்லிம் சாஹிப் நான் இறைவனுக்குரிய கடனை அடைத்து விட்டேன் என்று கூறினார். அதன் விளைவாக அல்லாஹ்வும் அருள் செய்தான். சில தினங்களிலேயே எவர்கள் பணம் கொடுக்க வேண்டுமோ அவர்கள் தமது கடனை சதர் சாஹிபிடம் திருப்பி அடைத்து விட்டனர். இப்போது அவர்கள் 1 ஏக்கர் நிலம் வாங்கியுள்ளார்கள். அதில் பாதியை மஸ்ஜித் கட்டுவதற்காக ஜமாஅத்திற்கு கொடுத்து விட்டார்கள்.

**நைஜீரியா முபல்லிக் கூறுகின்றார்கள்:**

லுக்குஜோ ஜமாஅத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி அஸ்வத் ஹபீப் சாஹிபா கூறுகின்றார்கள்: நான் எனது ஊரில் ஜவுளிக்கடை நடத்தி வருகிறேன். ஆனால் இப்போது எனது கணவர் பள்ளிக்கூடம் ஒன்றை திறந்துள்ளார். எனவே என்னுடைய பெரும்பான்மையான நேரம் பள்ளிக்கூடத்தில் தான் கழிகின்றது. பள்ளிக்கூடம் கடையிலிருந்து தொலைவில் உள்ளதால் கடையில் வியாபாரம் மிகக் குறைவாகவே இருந்து வந்தது. இது எனக்கு மிகவும் கவலை அளித்தது.

ஒருநாள் முபல்லிக் சாஹிப் வக்ஃபே ஜதீத் சந்தா கொடுக்கும்படி கூறினார்கள். அப்போது என்னிடம் எவ்வளவு இருந்ததோ அதனை நான் கொடுத்து விட்டேன். அதே நாளன்று சில மணி நேரம் கழித்து நான் என்னுடைய ஜவுளிக்கடையை திறந்த போது பல வாரங்களில் நடைபெறாத வியாபாரம் சில மணி நேரத்தில் நடந்து முடிந்தது. இது அல்லாஹ்வின் வழியில் நான் சந்தா கொடுத்ததன் விளைவாகும்.

விர்து கூரே ஜங்க் முபல்லிக் எழுதுகின்றார்கள்: இங்குள்ள கிராமத்தைச் சார்ந்த ஜாலு சிக்கா சாஹிப் கடந்த வருடம் தான் பைஅத் செய்தார்கள். பைஅத்திற்குப் பிறகு உடடினயாக சந்தா கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள். இந்த சந்தாவின் பரக்கத்தின் விளைவாக இந்த புதிய அஹ்மதிக்கு எந்த அளவுக்கு பரக்கத் செய்தான் என்றால் அந்த வருடத்தில் அவரது நிலத்தில் விளைச்சல் கடந்த வருடத்தை விட இரண்டு மடங்காக ஆனது. அப்போது மீண்டும் வக்ஃபே ஜதீத் சந்தாவை தானியங்கள் மூலமாக வழங்கினார்கள்.

**ஃபுர்கினோஃபாஸோ அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

Gava Region ஜமாஅத்தின் தலைவர் கூறுகின்றார்கள். ஒரு நாள் சட்டைப் பையில் 3,000 ஃபிராங் தான் இருந்தது. மனைவி கூறினார்கள். வீட்டில் சமைப்பதற்கு ஒன்றுமில்லை. வாங்கிக் கொண்டு வாருங்கள் என்று கூறினார். இதற்கிடையில் நான் மிஷன் ஹவுஸ் சென்றேன். அங்கு வக்ஃபே ஜதீத் செயலர் உங்களுக்கு வக்ஃபே ஜதீத் சந்தா பாக்கி இருப்பதாக கூறினார். இன்று எனக்கு சோதனை நடைபெறுவதாக நான் கருதினேன். நான் சந்தா தான் கொடுப்பேன் என தீர்மானித்து உடனடியாக கையிலிருந்து 3,000 ஃபிராங் கொடுத்து சந்தா ரசீதைப் பெற்றுக் கொண்டேன். அல்லாஹ்விற்கு எனது இந்த எளிய தியாகம் பிடித்துப் போனது. அதே நாள் எனது வீட்டிற்கு எனது வேலை தொடர்பாக ஒருவர் வந்து 3 இலட்சம் ஃபிராங் என்னிடத்தில் கொடுத்துச் சென்றார். என்னுடைய Order Book தயார் செய்யுங்கள். இந்த தொகை முன்பணமாக வைத்துக் கொள்ளுங்கள். மீதமுள்ள தொகையை பணி முடிந்ததும் கொடுப்பேன் எனக் கூறிச் சென்றார். அந்த நாளிலிருந்து அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை மிகவும் அதிகரித்து விட்டது. குறிப்பாக அந்நாளிலிருந்து தமது பொருளாதார கஷ்டங்களும் நீங்கி விட்டன என அவர் கூறுகின்றார்.

**ஃபங்ஃபோரா மாநிலத்தின் முபல்லிக் எழுதுகின்றார்கள்:**

ஒரு நண்பர் 4 ஆண்டுகளுக்கு முன் பைஅத் செய்தார்கள். படிப்படியாக முன்னேறினார்கள். சந்தா கொடுக்கத் தொடங்கினார்கள். ஒரு நாள் கூறினார்கள். முதலில் சந்தா அமைப்பில் பங்கு பெற்று விடுங்கள். ஏனென்றால் அதில் அளவற்ற பரக்கத்துகள் உள்ளன. அதற்கு நானே ஆதாரமாவேன். ஜமாஅத்தில் இணைவதற்கு முன், சந்தா கொடுப்பதற்கு முன் பெரும்பாலான மக்களிடத்தில் நான் கடன் வாங்கி வந்தேன். ஆனால் இன்று அல்லாஹ் எனது நிலையை மாற்றி விட்டான். சந்தா கொடுப்பதின் விளைவாக நான்

மக்களுக்கு கடன் கொடுக்கக் கூடியவனாக ஆகி விட்டேன். முதலில் மக்கள் என்னிடத்தில் கடனை வசூலிக்க வந்தனர். ஆனால் இன்று இமாம் மஹ்தியின் பரக்கத்தின் விளைவாக என்னிடத்தில் மக்கள் உதவி கேட்டு வருகின்றனர்.

நைஜர் ஒரு ஏழை நாடாகும். இந்த மக்களுக்கு வாங்கும் பழக்கம் உள்ளது. கொடுக்கும் பழக்கம் கிடையாது. ஆனால் அங்கு அல்லாஹ்வின் தனிப்பட்ட அருளாகும். எங்கெல்லாம் தப்லீக் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் பொருள் தியாகம் பற்றியும் கூறப்படுகின்றது. மக்களும் பொருள் தியாகத்தின் பக்கம் கவனம் செலுத்தி வருகின்றனர். பல கிராமங்களில் தப்லீக் செய்யப்பட்ட முதல் நாளன்றே மக்கள் அதாவது கொஞ்சம் சந்தா கொடுக்கத் துவங்கினர். இவ்வருடத்தில் வக்ஃபே ஜதீத் பொருள் தியாகத்தில் நைஜரின் 100% ஜமாஅத்துகள் பங்கு பெற்று விட்டன. கடந்த ஆண்டு வக்ஃபே ஜதீத் சந்தாவில் பங்கு பெற்றவர்களின் எண்ணிக்கை 1,478 ஆகும். ஆனால் இந்த ஆண்டு இந்த எண்ணிக்கை அதிகரித்து 17,706 ஆக ஆகிவிட்டது. அதாவது 16,228 புதிய அஹ்மதிகளின் வக்ஃபேஜதீத் சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆப்பிரிக்காவில் உள்ள அஹ்மதிகள் இன்னும் அதிகமாக மற்ற சந்தாக்களிலும் பங்கு பெறுவதற்கான பாக்கியம் கிடைத்துள்ளது.

அங்குள்ள ஓர் அஹ்மதி அல்ஹாஜ் இப்ராஹீம் அல் ஹஸன் என்பவர் தமக்கு ஒரு வீட்டைக் கட்டினார்கள். அதனையொட்டி ஒரு மஸ்ஜிதும், மூன்று பிளாட் கட்டிடங்களையும் கட்டினார். அந்த மஸ்ஜிதை ஜமாஅத்திடம் ஒப்படைத்து விடலாம் என அவர் எண்ணியிருந்தார். அந்த புதிய வீட்டில் அவர் குடிபுகுவதற்கு முன் ஒரு நாள் இரவில் (கனவில்) ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தனது புதிய வீட்டிற்கு வருகை தந்திருப்பதாக காண்கின்றார். பின்னர் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள், நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள், ஐந்தாவது கலீஃபா அனைவரும் வருகை தந்துள்ளார்கள். இறுதியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வருகை தந்தார்கள். பின்னர் கூறினார்கள். இதுதான் இந்த வீட்டின் புதுமனை புதுவிழா ஆகும். இதனை தவிர்த்து வேறொரு புதுமனை புதுவிழா நிகழ்ச்சி கூடாது. பின்னர் பள்ளியுடன் இணைந்திருந்த மூன்று பிளாட் கட்டிடங்களில் ஒன்றில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சென்று விட்டார்கள். இதனையும் மஸ்ஜிதுடன் ஜமாஅத்திற்கு கொடுத்து விடுங்கள் எனக் கூறினார்கள். இத்துடன் எனது கண்களும் திறந்தன. பின்னர் நான் மஸ்ஜிதுடன் அந்த பிளாட்டையும் மிஷன் ஹவுஸாக ஜமாஅத்திற்கு கொடுத்து விட தீர்மானித்தேன் எனக் கூறினார்கள். அதேபோன்று மஸ்ஜித் மற்றும் அந்த பிளாட்டை மிஷன் ஹவுஸாக அன்னார் கொடுத்து விட்டார்கள். அதன் மொத்த மதிப்பு 90,000 பவுண்ட் ஆகும்.

**மற்றொரு முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

ஒரு கிராமத்தில் சிறிது காலத்திற்கு முன் தான் அஹ்மதிய்யத் பரவியது. அங்கு ஓர் ஆச்சரியமான சம்பவத்தின் வாயிலாக சந்தா கொடுப்பது ஆரம்பமானது. எதிரிகள் நிறைய பணம் மற்றும் சாமான்களை எடுத்துக் கொண்டு மக்களுக்கு கொடுத்து அஹ்மதிய்யத்திலிருந்து அவர்களை பிரித்து விடலாம் என எண்ணி அங்கு சென்றார்கள். அது ஓர் ஏழ்மையான கிராமமாகும். மக்கள் விவசாயம் செய்து வந்தனர். எதிரிகள் நாங்கள் உங்களுக்காக பணம் கொண்டு வந்துள்ளோம். ஆனால் அஹ்மதிகளோ உங்களிடத்தில் சந்தா கேட்கின்றனர். நீங்கள் எங்களிடமிருந்து பணத்தை பெற்றுக் கொண்டு வியாபாரம் செய்யுங்கள் எனவும் கூறினர். அதற்கு மக்கள் கூறினர். நாங்கள் கொண்ட ஈமானிலிருந்து விலக வேண்டும் என்பதற்காகவா எங்களுக்கு பணம் கொடுக்கின்றீர்கள். அஹ்மதிகள் எங்களின் ஈமானின் முன்னேற்றத்திற்காகவே எங்களிடம் சந்தா கேட்கின்றனர். மேலும் ஒவ்வொரு முஸ்லிமும் இறைவனின் வழியில் ஏதாவது செலவு செய்ய வேண்டுமென்ற திருக்குர்ஆன் போதனையையும் எங்களுக்கு கற்றுத் தருகின்றனர். அஹ்மதிகள் அந்த சந்தாக்களிலிருந்து இஸ்லாத்திற்கு தொண்டாற்றுகின்றனர் என்பது எங்களுக்கு தெரியும். நிச்சயமாக நாங்கள் ஏழைகள்தான். உங்களது பணம் எங்களது தேவைகளை பூர்த்தியும் செய்யும். ஆனால் எங்களிடத்தில் உள்ளவற்றை நாங்கள் இறைவழியில் கொடுப்பதைத்தான் விரும்புகின்றோம். இவ்வாறாக அந்த மக்கள் அல்லாஹ்வின் அருளினால் சந்தா அமைப்பில் இணைந்தனர்.

ஆக, எப்படிப்பட்ட மக்கள் என்றால் அல்லாஹ்வின் திருப்திக்காக எல்லா வகையான பொருள் தியாகங்களையும் செய்கின்றனர். சிறிய தியாகமும் செய்கின்றனர். பெரிய தியாகங்களும் செய்கின்றனர். அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப அவர்களுடைய நற்கூலியை இரண்டு மடங்காக அதிகரித்துக் கொண்டே செல்கிறான். நாம் பார்த்தது போன்று பொருள் தியாகத்திற்கான உணர்வு ஜமாஅத்தில் நிலைபெற மட்டுமல்ல; மாறாக அது அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. புதிய அஹ்மதிகளும் கூட அதில் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர்.

வக்ஃபே ஜதீத் சந்தா முதலில் பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்குத்தான் எனக் கருதப்பட்டது. இந்த பொருள் தியாகத்தில் பாகிஸ்தான் அஹ்மதிகள் மட்டும் தான் பங்கு பெற்று வந்தனர். பின்னர் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் காலத்தில் அது முழு உலகத்திற்கும் பொதுவானதாக ஆக்கப்பட்டது. இந்தியா மற்றும் ஆப்பிரிக்காவின் சில நாடுகளின் செலவுகள் அதிகரித்து வந்தன. அவர்களில் பெரும்பாலார் புதிய அஹ்மதிகளாக இருந்தனர். அவர்களுக்கு சந்தா அமைப்பைப் பற்றி சரிவரத் தெரியாது. எனவே அவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்தில் தான் மேற்கத்திய நாடுகள் மற்றும் அமீர் (ஜமாஅத் உள்ள) நாடுகளில் வக்ஃபே ஜதீத் சந்தா வசூல் செய்யப்பட்டது. பள்ளிவாயில்கள் கட்டுகின்ற பணிகள் இருக்கின்றன. அதே போன்று மற்ற பணிகளும் இருக்கின்றன. நான் கூறிய சம்பவங்களிலிருந்து புதிய அஹ்மதிகள் எவ்வாறு பொருள் தியாகங்களில் முன்னேறி வருகின்றனர் என்பதை நீங்களே கண்டிருப்பீர்கள். அவர்கள் தியாகங்களில் முன்னேறுவதன் மூலமாக ஓரளவுக்கு அவர்களின் தேவைகள் பூர்த்தியாகி வருகின்றன. ஆனால் அத்துடன் புதிய மிஷன்களும் திறக்கப்பட்டு வருகின்றன. எனவே பணக்கார நாடுகள் மற்றும் மேற்கத்திய நாடுகளிலிருந்து வசூல் செய்யப்படுகின்ற சந்தாக்கள் எங்கு தேவைகள் அதிகரித்து வருகின்றதோ அங்கு புதிய திட்டங்களுக்காக செலவிடப்படும். பள்ளிகள் கட்டப்படுகின்றன. மிஷன் ஹவுஸ் கட்டப்படுகின்றது. புத்தகங்கள் அச்சடிக்கப்படுகின்றன. மேற்கத்திய நாட்டு அஹ்மதிகள் செய்கின்ற தியாகங்கள் அவர்களது நாட்டில் ஜமாஅத் திட்டங்களை முழுமை செய்வதற்கு பயன்படுகின்றது. ஏழை நாடுகளில் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்திற்கும் உதவி வருகின்றது. பணக்கார நாடுகளில் தியாகம் செய்யக் கூடிய மக்கள் தனி நபர் அளவில் சாதாரண தியாகங்களை செய்கின்றனர். ஆனால் ஜமாஅத் அளவில் இவர்களின் தியாகங்கள் கனமழையின் விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது. அல்லாஹ் எப்பொழுதும் அதனை ஒப்புக்கொண்டிருக்கின்றது. நான் வக்ஃபே ஜதீத் சந்தா தொடர்பாக எடுத்து வைத்த உதாரணத்திலிருந்து இன்றைய குத்பாவில் வக்ஃபே ஜதீதின் புதிய ஆண்டிற்கான அறிவிப்பு செய்யப்படும் என்பது வெளிப்படையான விஷயமாகும்.

மேலும் கடந்த ஆண்டின் புள்ளி விவரங்களும் எடுத்து வைக்கப்படும். அல்லாஹ்வின் அருளால் இது வக்ஃபே ஜதீதின் 53வது வருடமாகும். அது டிசம்பர் 30 அன்று முடிவு பெற்றிருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ். இந்த வருடத்தில் அல்லாஹ்வின் அருள் நிறைய கிடைத்துள்ளது. இந்த வருடத்தில் வக்ஃபே ஜதீத் சந்தாவில் 41 இலட்சத்து 83 ஆயிரம் பவுண்டு பொருள் தியாகம் செய்யும் பாக்கியம் ஜமாஅத்திற்கு கிடைத்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அல்லாஹ்வின் அருளால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 6 இலட்சத்து 64 ஆயிரம் பவுண்டு அதிகமாக வசூலாகி உள்ளது. பொருள் தியாகங்களில் வழக்கம் போல் **பாகிஸ்தான் முதலிடத்தைப் பிடித்துள்ளது.** அதன் பிறகு அமெரிக்கா, அடுத்து U.K., ஜெர்மனி ஆகும். U.K.ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் கடந்த ஆண்டை விட ஒரு இலட்சம் பவுண்டு அதிக வசூல் செய்துள்ளது. ஜெர்மனியும் வக்ஃபே ஜதீதில் U.K.வை விட முன்னேற முழுமையாக முயற்சி செய்துள்ளது. 2 இலட்சம் யூரோவை விட அதிகமாக வசூல் செய்துள்ளது. ஆனால் ஜெர்மனி கடந்த ஆண்டில் உள்ள அதே இடத்தில்தான் உள்ளது.

**உள்ளூர் கரன்ஸியின் அடிப்படையில் அதிக வசூல் செய்த முதல் ஐந்து நாடுகள்:** 1) ஜெர்மனி 2) இந்தியா 3) அமெரிக்கா 4) ஆஸ்திரேலியா 5) பெல்ஜியம் ஆகும்.

தனிநபர் சந்தா அளவில் அமெரிக்க முதலிடம் பிடித்துள்ளது. 2) சுவிட்சர்லாந்து 3) அயர்லாந்து 4) U.K. 5) ஜப்பான். பிரான்ஸ், கனடா, ஸ்பெயின் நாடுகளும் நல்ல முயற்சி செய்துள்ளன.

ஆப்பிரிக்காவில் வசூல் அடிப்படையில் முதல் ஐந்து இடங்களைப் பிடித்த ஜமாஅத்துகள்: 1) கானா 2) நைஜீரியா 3) மரூஷியஸ் 4) ஃபுர்கினோஃபாஸோ 5) பெனின்.

இந்த வருடம் வக்ஃபே ஜதீத் சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரம் அதிகரித்துள்ளது. இதேபோன்று மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்தை விட அதிகமாகும். நான் கூறியது போன்று நைஜர் ஜமாஅத் சிறிய, புதிய ஜமாஅத்தாக இருந்த போதிலும் நல்ல முயற்சி செய்துள்ளது. 16 ஆயிரம் பேரை சந்தா கொடுப்பவர்களின் புதியதாக சேர்த்துள்ளது. ஆப்பிரிக்காவின் மீதமுள்ள ஜமாஅத்துகளும் இவ்வாறு முயற்சி செய்தால் எண்ணிக்கை இன்னும் அதிகமாகி விடும். கானா மற்றும் நைஜீரியாவுக்கு அடுத்த வருடம் 50,000/- பேரை அதில் (சந்தா கொடுப்பவர்களில்) சேர்க்க வேண்டும். இது உங்களுக்குரிய இலக்கு ஆகும். அதற்கு வழி உள்ளது. அல்லாஹ்வின் அருளால் முயற்சி செய்தால் இதனை பூர்த்தி செய்து விடலாம்.

அடுத்து பாகிஸ்தான் ஜமாஅத்துகளின் நிலவரங்கள்: 1) லாஹூர் 2) கராச்சி 3) ரப்வா ஆகும்.

ரப்வாவிற்கும் கராச்சிக்கும் இடையில் கொஞ்ச வித்தியாசம் தான் உள்ளது. ரப்வாவுக்கு முன்னரே தெரிந்திருந்தால் அதனை செலுத்தி இருக்கும். 4, 5 ஆயிரம் ரூபாய் தான் வித்தியாசம் உள்ளது.

***(தொடர்ந்து ஹுஸுர் அவர்கள் பாகிஸ்தானின் மாநில, மாவட்டத்தின் தர வரிசையையும், பாகிஸ்தானின் அத்ஃபால் தர வரிசையையும், அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளின் தர வரிசையையும் குறிப்பிட்டார்கள்.)***

**இந்தியாவின் மாநில தரவரிசையின்படி,** 1) கேரளா 2) ஜம்மு காஷ்மீர் 3) தமிழ்நாடு 4) ஆந்திரா 5) மேற்கு பெங்காள் 6) கர்நாடகா 7) ஒரிசா 8) பஞ்சாப் 9) உத்திரபிரதேசம் 10) ராஜஸ்தான் 11) டில்லி.

**இந்தியாவிலுள்ள ஜமாஅத்துகளின் தர வரிசையின்படி,** 1) காலிகட் 2) கண்ணூர் 3) ஹைதராபாத் 4) காதியான் 5) சென்னை 6) கல்கத்தா 7) கருளை 8) பெங்களூர் 9) பைங்காடி 10) கோயம்புத்தூர், ஆஸ்னூர்.

அல்லாஹ் கடந்த வருடத்தில் பொருள் தியாகம் செய்தவர்களின் ஆற்றல்களை இந்த புதிய வருடத்தில் அதிகரிப்பானாக! அவர்களின் செல்வங்கள் மற்றும் வாழ்க்கையில் பரக்கத் செய்வானாக! முன்பை விட அதிகமாக தியாகங்களைச் செய்து கொண்டு செல்பவர்களாக இருப்பார்களாக! எதிர்காலத்திலும் ஜமாஅத்தின் ஒவ்வொரு அடியும் வெற்றிக்குரிய பாதைகளில் அமையட்டுமாக!

ஒரு வேதனைக்குரிய செய்தி: ஜெர்மனியைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஹிதாயத்துல்லாஹ் ஹப்ள் சாஹிப் ஜனவரி 4 அன்று செவ்வாய்கிழமை வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். 1946 -ல் அன்னார் பிறந்தார்கள். அவர்களுடைய வயது சுமார் 65 ஆகும். ஃபிராங்ஃபோர்ட்டில் கல்வி பயின்றார்கள். 1974 -ல் அன்னாருக்கு திருமணம் மரூஷியஸ் நாட்டைச் சேர்ந்த பெண்மணியுடன் நிகழ்ந்தது. அன்னாருக்கு ஒரு மகள் உள்ளார். இந்த மனைவி வஃபாத் ஆகி விட்டார்கள். பின்னர் இரண்டாவது திருமணம் காதியானில் சயீத் அஹ்மத் சாஹிப் தர்வேஸ் மகளுடன் நிகழ்ந்தது. இவர் மிகவும் தூய விசுவாசமிக்க அஹ்மதி ஆவார். நான் எவ்வாறு இஸ்லாத்தை ஒப்புக் கொண்டேன் என ஒரு சம்பவத்தை அவர்கள் கூறுகின்றார்கள்.

ஒருநாள் நான் எனது தாயின் வீட்டில் அமர்ந்திருந்தேன். ஒரு வெண்ணிற ஒளி எனது பின்புறமிருந்து வெளியாகி புத்தகம் வைக்கப்பட்ட அலமாரியின் பக்கம் செல்வது தெரிய வந்தது. அதில் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தது. அந்த ஒளி இறைவேதத்தின் (திருக்குர்ஆனின்) பக்கம் சென்று நின்று விட்டது. ஆக அந்த புத்தகத்தை எடுத்துப் பார்த்த போது அது ஜெர்மன் மொழியாக்கம் செய்த திருக்குர்ஆனாக இருந்தது. அன்னார் திருக்குர்ஆனை தனது கைகளில் எடுத்துப் படித்தார்கள். திருக்குர்ஆனின் சில பகுதிகளை படித்தவுடனேயே இறைவன் தனது வேதத்தின் மூலம் பேசுகின்றான். மேலும் இறை வேதம் உண்மையானது. இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இவ்வாறாக நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். இந்த சிந்தனை வந்தவுடனேயே மஸ்ஜிதை தேடினார்கள்.

அவர்களுக்கு மஸ்ஜித் நூர் பற்றி தெரிய வந்தது. இவ்வாறாக ஜமாஅத்துடன் தொடர்பு ஏற்பட்டது. மஸ்ஊது ஸெலூமி சாஹிப் முபல்லிக் சில்சிலா மர்ஹூமுடன் தொடர்பு ஏற்பட்டது. அன்னார் மிகவும் அன்புடனும் பரிவுடனும் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தினை அறிமுகம் செய்து வைத்தார்கள். 1969 -ல் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அன்னாரின் பெயரை ஹிதாயத்துல்லாஹ் என வைத்தார்கள். 1970 -ல் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஃபிராங்ஃபோர்ட் சென்றிருந்த போது ஹுஸூருடன் அன்னாரின் சந்திப்பு நிகழ்ந்தது. ஜெர்மனி அமீர் சாஹிப் கூட அன்னாரின் மூலமாகவே அஹ்மதி ஆனார்கள். ஏனென்றால் உண்மையைத் தேடி அவர்கள் காதியான் சென்றிருந்த போது அன்னாரும் காதியானில் இருந்தார்கள். எனவே அவருக்கு காதியான் முழுவதையும் சுற்றிக் காட்டி தப்லீக் செய்தார்கள். அன்னார் எப்பொழுதும் கலீஃபாக்களின் மொழிபெயர்ப்பாளராக தொண்டாற்றியுள்ளார்கள். மிகவும் எளிமையானவர். மிகவும் நல்லவர் மற்றும் தூய மனிதராவார். இறைவனின் மீதான நிச்சய உறுதி உச்சத்தை அடைந்திருந்தது. அதாவது அவர் பின்னவராக இருந்தாலும் தவக்குல் மற்றும் ஈமானில் பலரை விட முன்னிலை பெற்று விட்டார்கள் என நான் கருதுகிறேன். அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் அவர்களுக்கு நேசம் இருந்தது. விசுவாசமான தொடர்பிருந்தது. அதாவது எந்த விஷயத்திலும் துளி அளவு கூட கருத்து வேறுபாட்டை விரும்பியதில்லை. M.T.A. -வில் குத்பா அல்லது காலத்தின் கலீஃபாவின் நிகழ்ச்சி வந்து கொண்டிருந்தால் உடனடியாக பிள்ளைகளை அமைதிப்படுத்தி மௌனமாக கேட்கும்படி கூறி தானும் கேட்பார்கள். தொழுகையில் உருக்கமிக்கவர். தஹஜ்ஜுத் தொழக்கூடியவர். நவாஃபில் அதிகமாக தொழக்கூடியவர்.

எனக்கு நினைவிருக்கிறது. கடந்த வருடம் நான் ஜெர்மனியில் ஒருநாள் சூஃரா (ஆலோசனைக் கூட்டம்) கூட்டியிருந்தேன். அதில் ஒரு விஷயம் விவாதிக்கப்பட்டது. அங்கு ஜெர்மன் மொழியில் ஜமாஅத் சார்பாக ஒரு பத்திரிகை வெளியாகி இருந்தது. அதில் சிலருக்கு மாற்று கருத்து இருந்தது. அது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. எனக்கும் அந்த மாற்றுக்கருத்து சரி என்று தோன்றியது. அந்த பத்திரிகையில் ஹிதாயத்துல்லாஹ் சாஹிப் மிக முக்கிய பங்காற்றினார்கள். அதில் அன்னாரின் கட்டுரைகளும்,அன்னாரது பிள்ளையின் கட்டுரையும் வெளியாகியிருந்தது. ஆனால் மற்றவர்கள் பலர் அந்த பத்திரிகை ஆதரவாகப் பேசி தனது கருத்தை உண்மைப்படுத்த முயன்றார்கள். ஆனால் ஹிதாயத்துல்லாஹ் சாஹிப் எழுந்து நின்றார்கள். நீங்கள் எந்தெந்த தகவல்களை சுட்டிக் காட்டுகின்றீர்களோ அது மிகவும் சரியானதாகும். நான் அதற்காக வருந்துகிறேன். அதனை மேலும் ஆய்வு செய்வது அவசியமாகும் எனக் கூறினார். இவ்வாறிருக்க வேண்டும்; அவ்வாறிருக்க வேண்டும் என்ற முனுமுனுப்பு செய்யவில்லை. எங்களிடம் தவறு ஏற்பட்டு விட்டது. மன்னிப்புக் கேட்கிறோம் எனக் கூறி அமர்ந்தார்கள். இதுதான் அன்னாரின் உணர்வாகும்; தன்மையாகும்.

ஒருநாள் நான் அங்கு சென்றிருந்த போது, மிகவும் அழுத்தம் கொடுத்து என்னை தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். தமது வீட்டின் எல்லா அறைகளையும் சுற்றிக் காட்டினார். நூலகத்தைக் காட்டினார். முழு வீடும் புத்தகங்களால் நிறைந்திருந்தது. அவர்களிடம் இருந்த மகிழ்ச்சி, மற்றவர்களிடமிருந்து அவர்களை வேறுபடுத்திக் காட்டியது. மார்க்கத் தொண்டிற்கு அல்லாஹ் அன்னாருக்கு மிகவும் வாய்ப்பளித்தான். ஜெர்மன் மொழியிலும் இஸ்லாத்தைப் பற்றி நிறைய புத்தகங்கள் எழுதியுள்ளார்கள். மீடியாக்களோடு மிக நெருங்கிய தொடர்பிருந்தது. பல்வேறு மீடியாக்களில் சென்று கேள்வி பதில் நிகழ்ச்சி நடத்தினார்கள்.

ஜெர்மனி ஜமாஅத்தின் பத்திரிகை செயலராக நீண்ட காலம் பணியாற்றும் பாக்கியம் கிடைத்தது. மிகவும் அறிவிப்பூர்வமான மனிதராக இருந்தார். ஒரு நம்பிக்கையாளரிடத்தில் காணப்பட வேண்டிய சிறப்புகள் அன்னாரிடத்தில் இருந்தது. M.T.A ஜெர்மன் ஸ்டுடியோவின் மிகவும் சுறுசுறுப்பான ஊழியர் ஆவார். ஜெர்மன் நிகழ்ச்சிகளின் உயிராக இவர் கருதப்பட்டார். ஜெர்மனி மொழியில் ஜமாஅத் தப்லீக் மற்றும் தர்பிய்யத் பணிகளுக்கு ஒரு பெரிய கருவூலத்தை ஜெர்மன் ஜமாஅத்திற்கு விட்டு விட்டுச் சென்றுள்ளார். ஜெர்மனியின் பத்திரிகைகள், மீடியாக்களில் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் கொள்கைகளை அழகிய முறையில் வெளிப்படுத்தும் பாக்கியம் பெற்றிருந்தார். ஜெர்மனி மொழியுடன் ஆங்கில மொழியிலும் இவர்கள் புலமை பெற்றிருந்தார்கள். ஜெர்மன் மற்றும் ஆங்கிலத்தில் கவிதையும் எழுதி வந்தார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யாவில் ஜெர்மனி மொழியை கற்றுக் கொடுத்து வந்தார்கள். மிகவும் உழைப்புடன் இந்த கடமையை நிறைவேற்றி

வந்தார்கள். நான் கூறியது போன்று சிறந்த கவிஞர் ஆவார். அன்னாருடைய கவிதைகளின் புத்தகமும் வெளியாகியுள்ளது. ஜல்ஸாவில் சொற்பொழிவும் நிகழ்த்தி வந்தார்கள். திருக்குர்ஆன் மீது அன்னாருக்கு எல்லையற்ற அன்பிருந்தது. அல்லாஹ்வின் இருப்பின் மீது மிகவும் நம்பிக்கை இருந்தது. எந்தவொரு கடினம் மற்றும் துன்பத்தின் போதும் துஆ செய்யுங்கள் என்பதே பதிலாக இருந்தது. ஃபர்ளான் தொழுகைகளை தவிர நவாஃபில் மற்றும் தஹஜ்ஜுத் பக்கம் கவனம் இருந்தது. பொருள் தியாகத்தின் பக்கமும் கவனம் இருந்து வந்தது.

பலமுறை பிரச்சனைகள் ஏற்படும் போதெல்லாம் காலத்தின் கலீஃபாவிற்கு துஆவிற்காக கடிதம் எழுதி விட்டு, பின்னர் துஆவில் மூழ்கி விடு என்றே எனக்கு கூறி வந்தார்கள் என அன்னாருடைய மகள் எனக்கு எழுதினார்கள். இதுதான் பிரச்சனைக்கு ஒரே வழி என கூறி வந்தார்கள்.

அன்னாரது புத்தகங்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் போதனைகள், இஸ்லாத்தைப் பற்றிய 99 கேள்விகள் மற்றும் அதற்குரிய பதில்கள். இந்த புத்தகம் சில மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. அடுத்து இஸ்லாத்தின் பெண்ணின் நிலை, இஸ்லாத்தில் சொர்க்கம் மற்றும் நரகத்தின் சிந்தனை என சுமார் 12 புத்தகங்கள் வெளியாகி உள்ளன. ஜமாஅத் அளவில்அவர்கள் 4 புத்தகங்கள் எழுதியுள்ளார்கள். அதில் சில Magazine –களும் அடங்கும். காதியான் தாருல் அமான், இஸ்லாத்தில் பெண்களின் பங்கு போன்ற கட்டுரைகளும் அடங்கும். ஜமாஅத் Magazine, பத்திரிகைகளில் தொடர்ந்து இவரது கட்டுரைகள் வெளியாகி வந்தன. அவர் சுமார் 120 பிரசுரங்கள் எழுதியுள்ளார். T.V.நிகழ்ச்சிகள், Top show –க்களில் பங்கு பெற்று வந்தார்கள். T.V.–ல் இஸ்லாம் எவ்வளவு அபாயகரமானது என்ற தலைப்பில் ஒரு யூதரின் நிகழ்ச்சி இருந்தது. அதில் அன்னார் கலந்து கொண்டு இஸ்லாத்திற்காக வாதிட்டார்கள். அடுத்து இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளக் கூடியவர்கள் தீவிரவாதிகளா? என்ற ஒரு Top show இருந்தது. இதிலும் அன்னார் முக்கிய பங்காற்றினார்கள். சுருக்கமாக அதிகமான T.V.நிகழ்ச்சிகளில் அன்னார் கலந்து கொண்டார்கள். சமுதாய மற்றும் உலகளாவிய அரசியல்வாதிகளுடனும் பத்திரிகையாளர்களுடனும் அன்னாருக்கு நட்பிருந்தது. ஜெர்மனியின் பெரிய பத்திரகைகளில் அன்னாரின் கட்டுரைகள் வெளியாகி வந்தன. அன்னாருடைய மரணத்தைப் பற்றி ஜெர்மனியின் 16 பத்திரிகைகள் செய்து தந்துள்ளன. பல பெரிய பத்திரிகைகளும் அதில் அடங்கும். ஜெர்மனி முஸ்லிம்களில் அவரை மிகவும் பிரபலமானவர் என ஒரு ஜெர்மன் மாநிலத்தின் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஃபிராங்போர்ட் பத்திரிகை அவரை ஒரு கவிஞர் மற்றும் முபல்லிக் என எழுதியுள்ளது. இலக்கணத்தில் நோபல் பரிசு பெற்ற ஒருவர் அன்னாரை சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கடைசியாக அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் மரியாதையுடன் நன்றி செலுத்துகிறேன். அன்னார் மூலம் உண்மையான தூய மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளும் பாக்கியம் கிடைத்துள்ளது என தனது கடைசியாக எழுதிய கவிதையில் அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள். அல்லாஹ் அன்னாருடைய அந்தஸ்தை மேன்மேலும் உயர்த்திக் கொண்டே செல்வானாக. நான் கூறியது போன்று அன்னாருக்கு ஒரு மனைவியும் 8 பிள்ளைகளும் உள்ளனர். அல்லாஹ் அவர்களின் பாதுகாவலனாக இருப்பானாக. எப்போதும் அவர்களை தனது பாதுகாப்பில் வைப்பானாக. அல்லாஹ் அன்னாரது பிள்ளைகளையும் அவரது முன்மாதிரியின்படி வழிநடத்துவானாக. ஒன்றிரண்டு மகள்கள் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுகின்றனர். எல்லா பிள்ளைகளும் அன்னாரின் விருப்பத்திற்கேற்ப ஜமாஅத்தின் தொண்டர்களாக ஆகட்டுமாக. மேலும் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் அன்னார் வைத்திருந்த விசுவாசமிக்க தொடர்பை போன்று அன்னாரது பிள்ளைகளுக்கும் வாய்ப்பளிப்பானாக.

இதேபோன்று நான் ஜெர்மனி அஹ்மதிகளுக்கும், இளைய தலைமுறையினருக்கும் கூறுகிறேன். அன்னார் ஜெர்மனியராக இருந்த போதிலும் அஹ்மதி முஸ்லிமின் கடமைகளை முழுமையாக ஆற்றியுள்ளார்கள். நீங்களும் அவரது முன்மாதரியின்படி செயல்பட முயற்சி செய்யுங்கள். ஜெர்மனியிலும் ஐரோப்பாவிலும் எங்கெல்லாம் இஸ்லாத்தைப் பாதுகாப்பது அவசியமோ அங்கு முன்னேறுங்கள். முயற்சி செய்யுங்கள். உங்களது மொழியில் அதனை பரப்புங்கள். இஸ்லாத்தின் சிறப்புகளை எடுத்துரைத்து மற்ற மார்க்கங்களின் மீது இஸ்லாத்தின் மேன்மையை வெளிப்படுத்திக் காட்டுங்கள்.

இங்கு நான் ஒன்றை விளக்க விரும்புகின்றேன். ஹிதாயத்துல்லாஹ் சாஹிப் நான் கூறியது போன்று பல்வேறு சிறப்புகளுக்குரியவராக இருந்தார். ஆனால் சிலமுறை சிலர் சிலரின் அந்தஸ்தை பிறரின் உள்ளத்தில் கேள்விகள் எழும் வகையில் எடுத்துரைக்கின்றார்கள். செவ்வாய் அன்று சூரிய கிரகணம் ஏற்பட்டது. சூரிய கிரகணம் ஏற்பட்ட நேரமும் அவரது மரண நேரமும் ஒன்றாக இருந்தது. இதில் ஏதோ தொடர்பு இருக்கலாம் என்று சிலர் கூறுவதாக அறிந்தேன். இதுபோன்ற விஷயங்களுக்கு இஸ்லாத்தில் எவ்வித இடமுமில்லை.

ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் முஹைரா அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் அன்னாரின் மகன் ஹஸ்ரத் இப்ராஹீம் மரணமடைந்த நாளன்று சூரிய கிரகணம் ஏற்பட்து. இப்ராஹீமின் மரணத்தின் காரணமாகத்தான் சூரியனுக்கு கிரகணம் ஏற்பட்டுள்ளது என பலர் கூறத் தொடங்கினர். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எவருடைய பிறப்பு, இறப்பின் காரணமாக சூரியனுக்கும், சந்திரனுக்கும் கிரகணம் ஏற்படுவதில்லை. நீங்கள் கிரகணம் ஏற்படுவதைக் கண்டால் தொழுங்கள். துஆ செய்யுங்கள். எனவே கிரகணத்தைப் பார்த்தால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கற்றுக் கொடுத்த வழிமுறை இதுதான். கிரகணத் தொழுகை தொழ வேண்டும். உலகில் அந்த நாளன்று பலர் பிறந்திருப்பார்கள். இறந்திருப்பார்கள். ஒவ்வொருவருக்கும் ஏதாவது அந்தஸ்தை வழங்கி தமக்கு பிரியமான அன்பிற்குரியவர் இறந்து விட்டதாலோ அல்லது பிற்நததாலோ தான் கிரகணம் ஏற்பட்டது என அனைவரும் கூறி விடுவர். இதிலிருந்து தவறான சம்பிரதாயங்கள் வெளிப்படும். எனவே அஹ்மதிகள் எப்போதும் இதிலிருந்து விலகி இருக்க வேண்டும். எதற்கு அல்லாஹ்வும் அவனது தூதரும் கட்டளையிட்டுள்ளார்களோ அதனை மட்டுமே செய்யுங்கள்.

இதனை தவிர நான் ஒரு துஆவிற்கான அறிவிப்பு செய்ய விரும்புகிறேன். நேற்று முல்தானில் அஹ்மதிய்யத்தின் எதிரிகள் நமது சில அஹ்மதிகள் மீது துப்பாக்கி சூடு செய்துள்ளார்கள். அதன் விளைவாக ஜனாப் பஷீர் அஹ்மத் சாஹிப் மகனாகிய வாஜித் அஹ்மத் நுஃமான் குண்டடிபட்டுள்ளார்கள். காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரின் வயது 25 ஆகும். அல்லாஹ் அவருக்கு முழுமையான விரைவான குணத்தை வழங்குவானாக. மேலும் எதிரிகளை தனது பிடியின் கீழ் கொண்டு வருவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 07.01.2011**

Translated by : **Maulvi ABDUR RAHMAN TAHIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**